
# வள்ளலார் நம்முடலில் புகுவதற்கான வழிமுறைகளும் அருட்பெருஞ்சீர் சக்தியும்




ஆசிரியர் : டி. ஆர். துளசிராம், ஸ்ரீ அரவிந்த ஆசிரமம்.

வெளியீடு: அரோ - மா - இராமலிங்கம் டிரஸ்டு
(AURO - MA - RAMALINGAM TRUST, MADURAI - 1)
33, மஹால் 4 - வது தெரு, மதுரை - 1.

" நான் இந்த உடம்பில் இருக்கிறேன், இனி எல்லா உடல்களிலும் புகுந்துகொள்ளுவேன் "— வள்ளல் பெருமான் ஜனவரி 1874.


" அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை
அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை "


ஈரடிகளாக உள்ள இம்மந்திரம் ஓதி எழுதும் காகிதத்தில் இப்படத்தின் இறை அருட்சக்திகளைப் பெறலாம். அக்காகித நடுவிலும் ஓரங்களிலும் மூலைகளிலும் தொட்டு உணரலாம். உடலிலும் நெற்றியிலும் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரின் சக்தி (APJA), கைகால்களிலும் உடலின் சூழலிலும் சச்சிதானந்த சக்தி (SAT), கண்களில் உள்முக உணர்வு தரும் பரம்பொருளின் உயரிய சமநிலை சக்தி (ABT) படம் தொட்டும் பார்த்தும் உணர்க. முகப்புப்படம் பொதுவான அருட்சக்தி கொண்டது. பிளாஸ்டிக் உறையிட்ட படமும் உணவும் ஒரே சமயம் இரு நிமிடம் ஆண்டவரை நினைந்து தொட்டு, அல்லது ஒரு கையால் படம் தொட்டபடியேயிருந்து உணவு உண்டால் அருட்சக்தி புகுந்து உடல்நலம் பெருகும். மற்ற நால்வகை சிறப்பான அருட்சக்தி படங்கள் இப்படத்தைக் கொண்டே கட்டுரையில் கூறியபடி பெறப்பட்டவை. கணவன் மனைவி சேர்ந்து தொட்டும் பெறலாம். அந்நான்கின் தனித்தனி மந்திரம் இப்படத்தின் ஓரத்தில் எழுதி சிறப்பு சக்திப் படமாக மாற்றலாம். அப்படங்களின் மேல்-கீழ் மூலைகளில் மேற்சொன்ன மூன்று இறைசக்திகளும் ஒன்றுகூடி செயல்படும் பேராற்றலை தொட்டு உணரலாம்.

மேலும் சில சிறப்பு அருட்சக்திகளைப் பெறுவோம். " அருட்பெருஞ்ஜோதி, அருட்பெருஞ்ஜோதி, அருட்பெருஞ்ஜோதி, அருட்பெருஞ்ஜோதி " இம்மந்திரம் எழுதிய காகிதம் அல்லது படம் மூன்று இறைசக்திகளை ஒரே சீராக இசைவாக இணைத்து சமரசப்படுத்தி அருட்சீர் சக்தியை (All Round Harmony) தொட்டவிடமெல்லாம் உணர்த்தும். " தனிப்பெருங்கருணை தனிப்பெருங் கருணை, தனிப்பெருங்கருணை தனிப்பெருங் கருணை ". இம்மந்திரம் பரம்பொருளின் உயர் சமநிலை (ABT) தரும். " தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி, அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை " இம்மந்திரம் எழுதிய காகிதம் நடுவே முதலில் தொட்டு பின்பு மூலைகளில் தொட்டால் எங்கும் தீவிர உள்முக சக்தி தரும். மூலைகளை முதலில் தொட்டால் உயர் சமநிலை உணர்த்தும். அப்போது நடுவும் ஓரமும் உள்முக சக்தி தரும்.

ஈரடியாக எழுதிய ஒரு மந்திரத்தை 1) அதன் முதல் எழுத்தின் ஓரத்திலும் 2) கடைசி எழுத்தின் ஓரத்திலும் 3) நடுப்பாகத்திலும் தொட்டு, அதன் அருட்சக்தியின் திசை, பரிமாண அளவு அல்லது தீவிரத்தன்மை ஆகியவை உணரலாம் (Intensity and direction of Power). " ஜோதி அகவலில் " வரும் 800 ஈரடி மந்திரங்களை இவ்வாறு ஒன்றன் கீழ் ஒன்றாக எழுதித் தொட்டு அருட்சக்தியின் வகைகள், திசை, மற்றும் பரிமாண அளவு வேறுபாடுகள் உணரலாம். அவை மேற்சொன்ன எட்டு மந்திரங்களில் பெரும்பாலும் அடங்கும்.

(தொடர்ச்சி மூன்றாவது அட்டைப்பக்கம்)






1-வது படம் தொட்டு Outward Power வெளிமுக அருட்சக்தி உணர்க. மூலைகளில் மிக அதிகம். சுவாமி நெற்றி, உடல் தொட்ட வாறேயிருந்து உணவு உண்டால் உடல்நலம் பெருகும். நோய் குணமாக மிக உதவும். கலர் ரிப்பன் உணவு சிகிச்சை முறைப்படி, குறை கலர்கள் கண்டுபிடித்து, உணவு வேளை யில் "குறைகலர்" ரிப்பனை படம்மீது வைத்து தொட்டபடியே உண்க. அருட் சக்தியை எதிர்க் கும் அஞ்ஞான சக்திகளால் வரும் நோயை யும் குணமாக்க உதவும். மருந்தும் கொள்க.


"அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி, தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி" மகாமந்திரம் அல்லது "அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை, அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி" என்று ஓதி எழுதும் காகிதத்தில் இப்படத்தின் வெளிமுக சக்தி பெறலாம். உடலிலும் அமையும்.

2-வது படம் அருட்பெருஞ்சீர் சக்தி (Integral Harmony Power) உணர்த்தும். விரல் நுனிகளால் மேல் மூலைகளைத் தொட்டு உள்முக-மேல்முக சக்தியும் (Inward-Upward Power), கீழ் மூலைகளில் வெளி முக-கீழ்முக சக்தியும் (Outward-Downward), மற்ற இடங்களில் இசைவான சமரச உணர்வும் (Harmony) உணரலாம். குறைந்த பட்சம் உள்முக, வெளிமுக சக்திகளை மேல் மூலைகளிலும் கீழ் மூலைகளிலும் அறியலாம். உடல், மனம், உள்ளம், இந்தி ரியம் சீராக இசைவாக இணைத்து உடல் நலம் பாதுகாத்து தியானம் வளர்க்கும். தம்பதியர் சேர்ந்து தொட்டு பயனுறுக.


"தனிபெருங்கருணை தனிப்பெருங்கருணை, அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி" இம்மந்திரம் ஓதி எழுதும் காகிதத்திலும் இப்படத்தின் சக்தி தொட்டு அறியலாம். உடலைத் தெய்வீகத் தரமாக மாற்றுவதற்கு இது முதற்படியாகும்.



3-வது படம் எங்கு தொட்டாலும் (Inward Power) உள்முக அருட்சக்தி உணரலாம். மேல் மூலைகளில் அதிகம். அங்கு தொட்டுப் பிடித்தபடியே யிருந்து ஆழ்ந்த தியானம் செய்யலாம். சுவாமி நெற்றி பார்த்து அருள் ஒளியும் சக்தியும் பெறலாம். இப்படம் ஒரு கையால் தொட்டபடியே இருந்து உணவு, பானம், பழம் உண்டால், உடலிலேயே உள்முக அருட்சக்தி பதிந்து தியானம் இயல்பாகவே வளர்க்கும். தொடர்ந்து பயின்றால் உடலிலும்கூட பரம் பொருளின் உயர் சமநிலை வந்தடையும்.




" அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை, தனிப்பெருங்கருணை அருட்பெருஞ் ஜோதி " இம்மந்திரம் ஓதி எழுதிய காகிதத்திலும் இப்படத்தின் உள்முக சக்தி தொட்டு உணரலாம், உடலிலும் வரும். உள்ளத்தில், நெற்றியில் இருக்கும் ஆன்ம அருள் ஒளியுடனும் இறைவனுடனும் ஒன்றுபடுத்தும்.




4. இரண்டாவது மூன்றாவது படங்களின் சக்திகளை இணைத்துத் திரட்டி தீவிரப்படுத்தித் தருவது இந்நான்காவது படம். இது பூரண அருட்சக்திப் படம் எனலாம். அதன் சக்தி உச்சிமுதல் உள்ளங்கால்வரை பரவிப் பாயும். உள்ளத்திலும் ஆழ்ந்து சென்று தலை உச்சிக்கு மேல் ஏறிச்செல்லும். மேல் மூலைகளிலும் சுவாமி நெற்றியிலும் தொட்டு தியானம் பயிலவும், உணவு, பானம், பழம், குடிநீர், தொட்டு அதே சமயம் இப்படமும் தொட்டு சக்தி ஏற்றி உண்ண மிக உதவும். இறைமை, இறவாமை உடலுக்கும் தர வல்லது. 1, 2, 3 படங்களை வரிசையாகப் பழகிய பின் இப்படத்தின் சக்தி பயிலுக.

2-வது படத்தின் மந்திரமும் பின்பு 3-வதின் மந்திரமும் சேர்த்து ஓதி எழுதினால் பூரண அருட்சக்தி பெறலாம். " சுத்த வடிவும் சுகவடிவாம் ஓங்கார நித்த வடிவும் நிறைந்தோங்கு சித்தெனும் ஓர் ஞான வடிவும் நான் பெற்றேன். எங்கெங்கும் தான விளையாட்டு இயற்றத்தான் " இப்பாடலின் சக்திபோடு ஒத்துப்போகும்.